நாட்டுக்கோழி முட்டைகளைப் பொரிப்பதில் கையாள வேண்டிய எளிய வழிமுறைகள்

பெ. செந்தில் குமார், வ. ரங்கநாதன் மற்றும் ப. சங்கர்
கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஓரத்தநாடு.
கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை - 51.

நாட்டுக்கோழி 6 மாத வயதில் முட்டையிடத் தொடங்குகின்றன. நாட்டுக் கோழியின் பாரம்பரியம், சுற்றுச் சூழல், சரிவிகித தீவன அளவு மற்றும் பராமரிப்பு முறைகள் ஆகியவற்றை பொறுத்து அது இடக்கூடிய முட்டைகளின் எண்ணிக்கை மாறுப்படும்.

பொதுவாக ஒரு பெட்டைக்கோழி ஒரு ஆண்டிற்கு சுமார் 45 முதல் 80 முட்டைகள் வரை இடும். சரியான தீவனம் அளிக்காமல் வெளியே மேய்ந்து திரியும் நாட்டுக் கோழிகள் குறைவான அளவே முட்டைகள் இடும். நாட்டுக் கோழியின் முட்டையின் எடை சுமார் 30 முதல் 45 கிராம் இருக்கும்.

பொதுவாக நாட்டுக் கோழிகள் வீட்டில் ஒத்துக்குப்புறமாக வைக்கப்பட்டுள்ள கூடையில் முட்டைகளை இட்டு குஞ்சுகளைப் பொரிக்கும். ஆனால் நாட்டுக் கோழிப் பண்ணைப் பராமரிப்பில், கூடை அல்லது அகலமான மரப்பெட்டிகளை பயன்படுத்தலாம்.

சுமார் 5 நாட்டுக் கோழிகளுக்கு 1 முட்டைக் கூடை என்ற வீதத்தில் பயன் படுத்த வேண்டும். நாட்டுக் கோழிகள் உயரமான இடத்தில் முட்டை இடுவதை விரும்பும். எனவே, முட்டைக் கூடைகளை சற்று உயரமாக கட்டி வைப்பது நன்று.

முட்டை சேகரிப்பு முறைகள்

நாட்டுக் கோழிகள் முட்டையிட்ட வுடன், முட்டைகளை உடனே எடுத்து தனியாக சேமிக்கவேண்டும். மிகவும் அழுக்கான முட்டைகள் மற்றும் உடைந்த முட்டைகளை சேகரிக்க கூடாது. முட்டைகளை தண்ணீரில் கழுவி சுத்தம் செய்யக் கூடாது.

சேகரித்த முட்டைகளை அகலமான மண் சட்டிகளில் பாதியளவு மணல் அல்லது உமி நிரப்பி அதில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். எப்பொழுதும் முட்டையின் அகலமான பகுதி மேல்நோக்கி இருக்குமாறு அடுக்கி வைக்க வேண்டும்.

கிருமி நீக்கம் செய்தல்

அடைமுட்டைகளை பார்மலின் புகை மூலம் கிருமி நீக்கம் செய்தல் மிக முக்கியம். பார்மால்டிகைடு மிகவும் சக்தி வாய்ந்த நன்றாக ஊடுருவக் கூடிய வாயு வாகும். புகை மூட்டம் போடுவதற்கு சிமெண்ட் அல்லது அட்டைப் பெட்டி யினை தயார் செய்து கொள்ள வேண்டும். முட்டைகளை இதனுள் அடுக்கி வைக்க வேண்டும்.

பின்னர், 5 கன அடி அளவுள்ள பெட்டிக்கு, 1 கிராம் பொட்டசியம் பெர் மாங்கனேட் மற்றும் 2 மில்லி லிட்டர்

பார்மால்டிகைடு திரவத்தினை அகன்ற வாயுள்ள ஒரு பாத்திரத்தில் வைத்து பெட்டியினை மூடி விட வேண்டும்.

சுமார் 20 நிமிடங்களுக்குப் பிறகு, திறந்து உள்ளே இருக்கும் புகையை வெளியேற்றி விட வேண்டும். இவ்வாறு செய்வதால் முட்டையில் உள்ள அனைத்துக் கிருமிகளும் அழிந்து விடும்.

நாட்டுக் கோழி முட்டைகளைப் பொரிக்கும் முறைகள்

1. நாட்டுக்கோழி மூலம் இயற்கை முறையில் பொரிக்க வைத்தல்.

2. இயந்திர அடைக்காப்பான் மூலம் செயற்கை முறையில் பொரிக்க வைத்தல்.

1. நாட்டுக்கோழி மூலம் இயற்கை முறையில் பொரிக்க வைத்தல்

நாட்டுக்கோழிகள் தான் இடும் முட்டைகளை, தானே அடைக்காத்து குஞ்சு பொரிக்கும் தாய்மைக் குணம் அதிகம். ஆனால், அவைகளால் 50 முதல் 60 சதவிகித முட்டைகளை மட்டுமே பொரிக்க வைக்க முடிகின்றது. இதற்கு முக்கிய காரணம், சரியான வெப்பநிலையில் முட்டைகளை சேமித்து வைக்காததே ஆகும்.

பொதுவாக ஒரு கோழி 15 முட்டைகள் இடுகின்றது என்றால், 15 நாட்களுக்குப்பிறகுதான் அடைக்காக அமரும். எனவே, முட்டைகள் 15 நாட்கள் திறந்த வெளியில் அறை வெப்ப நிலையில் தான் இருக்கும். இந்த நிலையில் முதலில் இட்ட 6 முதல் 9 முட்டைகளில் உள்ள கரு இறந்து போயிருக்கும். கடைசியாக இட்ட 6 முதல் 10 முட்டைகள் மட்டுமே பொரிக்கும்.

இப்பிரச்சினையை சரி செய்ய, முட்டைகளை முறையாக சேமித்து வைத்தால் அனைத்து முட்டைகளையும் பொரிக்க வைக்கலாம். அதாவது, கோழி முட்டையிட்டவுடன். அதனை எடுத்து பாதி அளவு மண் அல்லது தவிடு நிரப்பப்பட்ட மண் சட்டியில், முட்டையின் அகன்ற பாகம் மேல்நோக்கி இருக்குமாறு சேமித்து வைக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் முட்டைகளை சேமிக்க வேண்டும்.

இந்த மண் சட்டியை வீட்டின் குளிச்சியான பகுதியில் வைத்திருத்தல் வேண்டும். மேலும், வெயில் அதிகமாக உள்ள மதிய நேரத்தில் சுத்தமான ஈரத் துணியால் முட்டை உள்ள மண் சட்டியை மூடி வைக்க வேண்டும்.

இவ்வாறு சேகரித்த முட்டைகளை, கோழி அடை உட்காரும் பொழுது அடையில் வைத்தால், கருவுள்ள அனைத்து முட்டைகளும் பொரிக்க வாய்ப்புள்ளது.

2. நாட்டுக்கோழி முட்டைகளை செயற்கை முறையில் பொரிக்க வைத்தல்

அடைகாக்கும் இயந்திரம் என்பது மின்சாரத்தில் இயங்க கூடியது. இதில் முட்டைப் பொரிப்பதற்கு தேவையான வெப்பம், ஈரப்பதம் மற்றும் முட்டைகளை திருப்பும் வசதி போன்றவைகள் உள்ளது.

குஞ்சு பொரிக்கும் இயந்திரத்தில் இரு வகையான தட்டுகள் உள்ளன.

அவை :-

1. அடைகாக்கும் தட்டுகள்.

2. குஞ்சு பொரிக்கும் தட்டுகள்.

முதல் 18 நாட்கள் அடைகாக்கும் தட்டிலும், கடைசி மூன்று நாட்கள் குஞ்சு பொரிக்கும் தட்டுகளிலும் முட்டைகளை வைத்து குஞ்சு பொரிக்க வேண்டும். அடைகாக்கும் தட்டுகள் மணிக்கு ஒருமுறை திருப்ப வேண்டும்.

வெப்பநிலை	வெப்பநிலை	ஈரப்பதம்	முட்டையினைத் திருப்புதல்
அடைகாக்கும் பகுதி	99.5 °F	85°F	மணிக்கு ஒரு முறை
குஞ்சு பொரிக்கும் பகுதி	99.5 °F	90°F	திருப்பக் கூடாது

நாட்டுகோழி முட்டைகளை அடை வைக்கும் பொழுது கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்புகள்

1. அடைமுட்டைகளை குளிர் காலத்தில் 7 நாட்களுக்குள்ளும்,வெயில் காலத்தில் 5 நாட்களுக்குள்ளும் சேகரித்து அடைக்கு வைக்க வேண்டும்.
2. மிகவும் அழுக்கடைந்த, எச்சம் மற்றும் கழிவுகள் ஒட்டியிருக்கும் முட்டைகளை அடைக்கு வைக்கக் கூடாது.
3. அடை முட்டைகளை நீரில் கழுவக் கூடாது.
4. அடைகாக்கும் இயந்திரத்தில் வெப்பம் மற்றும் ஈரப்பதம் சரியான அளவில் இருக்கிறதா என்று சரிபார்க்க வேண்டும்.
5. மின்சாரம் தடைபடும் நேரத்தில் ஜென ரேட்டர் அல்லது இன்வேர்ட்டர் மூலம் இயக்க வேண்டும்.
6. அடைவைத்து 7-வது நாளில் முட்டைகளில் கரு வளர்ந்து இருக்கிறதா என்பதை விளக்கு வெளிச்சத்தில் பார்த்து கரு வளர்ச்சி அடையாத முட்டைகளை நீக்கி விட வேண்டும்.

முட்டையில் கருப்பிடிக்காத தன்மையினை ஆராய்தல்

21 நாட்களுக்குப் பிறகு பொரிக்காத முட்டைகளை எடுத்து பரிசோதித்து காரணங்களை கண்டறிவது மிக முக்கியம். பொரிக்காத முட்டைகளைச் சோதனை செய்யும் பொழுது அதில் கண்டறியப்படும் அறிகுறிகளுக்கு ஏற்ப முட்டை பொரிக்காததற்கான காரணங்களை தெரிந்து கொள்ளலாம்.

அறிகுறிகள்	காரணம்
1. துர்நாற்றத்துடன் கூடிய கரு.	நுண்ணுயிர் பாதிப்பு.
2. சிறிய கீழ்தாடை அல்லது குஞ்சுகளில் தாடை இல்லாமல் இருப்பது.	கால்சியம் சத்துகுறைபாடு.
3. மிகச்சிறிய கரு அல்லது உரோமம் அற்ற கரு.	ஆரம்ப காலத்தில் அதிக அடைக்காப்பான் வெப்பநிலை
4. முட்டையின் உள்ளே உள்ள பகுதிப் பொருட்கள் ஆவியாகாமல் நீர் கோர்த்த குஞ்சுகள்.	அடைகாப்பானில் அதிக ஈரப்பதம்.
5. குஞ்சினை சுற்றி உலர்ந்த சவ்வு ஒட்டி கொண்டிருத்தல்.	அடைகாப்பானில் குறைவான ஈரப்பதம் அல்லது அதிக வெப்பநிலை நிலவுதல்.
6. அதிக அளவு மஞ்சள் கரு குஞ்சுக்குள் செல்லாமல் வெளியே காணப்படுவது.	அடைகாப்பானில் கடைசி நேரத்தில் அதிக வெப்ப நிலை.

மேற்கூறிய முறைகளின் மூலம் முட்டைகளை அடை வைத்து குஞ்சுப் பொரித்தலை மேற்கொண்டால் நாட்டுக் கோழி வளர்ப்பின் மூலம் எளிய முறையில் அதிக லாபம் பெறலாம்.